Registered c...          பக்கங்கள் 04          விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM          Peoples Daily          மக்கள் தினசரி

நாதம் 03     திருவள்ளுவர் ஆண்டு 2023     ஆடி 10     25 - 07 - 1992     சனிக்கிழமை     ஓசை 158

## ஐம்பது வருடங்களாக எவரும் இறக்காத கிராமம்

கடந்த ஐம்பது ஆண்டுகளில் எவருமே இறக்காத கிராமம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திபெத்தின் தெற்கு மலைப்பிரதேசத்தில் இருக்கும் இக்கிராமத்தில் கடந்த ஐம்பது வருடத்தில் எவருமே இறக்கவில்லை. 1942-ம் ஆண்டில் தான் கடைசியாக இறப்பு நடந்துள்ளது. தற்போது இக்கிராமத்தில் நூற்றி முப்பது, நூற்றிநாற்பது வயதைக் கடந்தூ பின்னும் வாழ்ந்து வருகின்றார்கள். காற்று மாசடையாத சுற்றாடல், கிராம மக்கள் மத்தியில் இருக்கும் பரஸ்பர நல்லுறவு, போஞ்சி, அரிசி, மீன் ஆகியவற்றை மட்டுமே உணவாகக் கொள்வது என்பவையே இவர்களின் நீடித்த ஆயுளுக்குக் காரணமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# யாழ். குடாநாட்டு முற்றுகையால் மக்கள் எதிர்கொள்ளும் பேராபத்து

## இன்று ஒய்வூதிய கொருப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையில் இன்று சனிக்கிழமை ஆடி மாதத்துக்குரிய சிவில் ஓய்வூதியக் கொடுப்பனவு காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை நடைபெறும் என மேற்படி கிளையின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

## சிங்கள ராணுவத்தின் போர் யுத்தி குறித்து பிரிட்டிஷ் உதவி நிறுவனங்கள் கவலை

(லண்டன்)

யாழ். குடாநாட்டை சுற்றிவளைக்க இராணுவம் முயற்சிப்பதுபோல் தெரிகின்கிறது. இது பொதுமக்களுக்கு முன்னரைவிட ஆபத்தை அதிகரித்துவிடும். இந்நிலையில், போரின் நடுவில் அகப்பட்டு தவிக்கும் அப்பாவிப் பொது மக்களை பாதுகாப்பதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை மேற் கொள்ளுமாறு பிரிட்டனிலுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக தலைவர். பிரபாகரனுக்கும் அவர்கள்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

ஐந்து உதவி வழங்கும் நிறுவனங்களின் சார்பில் டாக்டர் மைக்கேல்ரெயிலர் ஜனாதிபதிக்கும் புலிப்படைகளின் தளபதி பிரபாகரனுக்கும எழுதியுள்ள கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார். இந்தக் கடிதம் கடந்த புதன் கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட இக் கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்கள் பற்றி அகதிகள் நலன்காக்கும் அமைப்பின் தலைவர் மைக்கல் றோஜேர்ஸ் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

முக்கியமாக வடக்கின் மேல் விதிக்கப்பட்டுள்ள தடையின் காரணமாக நீண்டகாலமாக வடபகுதி மக்கள் படும் துன்பங்கள் பற்றியும், வான்வெளி தாக்குதல்களால் அதிகரித்து வரும் ஆபத்துக்கள் எமது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

எங்களுக்குத் தெரிந்த வகையில் இராணுவம் யாழ் குடாநாட்டைச்சுற்றி வளைக்க முயற்சிப்பதுபோல் தெரிகிறது அப்படியானால் பொதுமக்களுக்கு முன்னரைவிட ஆபத்து அதிகரிச்துவிடும்.

வடக்கில் யுத்தம் உச்ச நிலையை எட்டக்கூடும் என்ற அச்சம் கடந்த சில நாட்களாகவே எழுந்துள்ளது. பத்து இலட்சத்திற்கு அதிகமான மக்கள் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் இல்லாமல் வடக்கில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று கூறுகிறார். இந்த நிறுவனங்களின் ஒன்றான அகதிகள் நலன்காக்கும் அமைப்பின் தலைவர் மைக்கல்றொஜேர்ஸ் கூறுகிறார் மேலும், விமானத் தாக்குதல் நடந்து வருவதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 8 இராணுவத்தினர் கைது

(மாத்தளை)

இராணுவத்தைவிட்டு தப்பி ஓடி பல கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த எட்டுப்பேர் மாத்தளையில் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் தூர இடங்களில் வேலையில் இருந்தபோது தலைமைப் பீடத்திற்குத் தெரியாமல் சீருடைகளுடனும் ஆயுதங்களுடனும் தப்பியோடியவர்கள் எனவும் இந்த ஆயுதங்களைக் கொண்டே கொள்ளைகளில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்டுகின்றது. இதே வேளை, மாநோ பகுதியில் கொள்ளையில் ஈடுபட்டு வந்த இரண்டு சிறிலங்கா இராணுவத்தினரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு சீருடையில் மோட்டார் சைக்கிளில் வந்த இந்த இராணுவ வீரர்கள் இருவரையும் பொலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் பகுதி சுற்றிவளைப்பு ஒருவர் பலி; ஒருவர் காயம்

(திருமலை)

திருமலை, மூதூர் பகுதிகளைத் திடீரென சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இளைஞர் ஒருவரைச் சுட்டுக் கொன்றதுடன் மற்றொருவரைக் கைது செய்துள்ளனர்.

பூர், இலக்கந்தை, பாட்டாலிபுரம் ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய தோப்பூர் இராணுவத்தினர் தொடுவான் குளம் என்னுமிடத்தில் வைத்து கணபதிப்பிள்ளை இந்திரன் (வயது 16, கொக்கட்டிச்



அண்மையில், சிறிலங்கா அரசாங்கத்தின்

## வெலிக்கடை படுகொலை; லண்டனில் கண்டனப் பேரணி

83 யூலையில் வெலிக்கடை ...த்தும்படி லண்டனிலுள்ள உல... இராணுவ நடவடிக்கைகளைக்

ளது. இது தொடர்பாக தலைவர் பிரபாகரனுக்கும் அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

ஐந்து உதவி வழங்கும் நிறுவனங்களின் சார்பில் டாக்டர் மைக்கேல்ரெயிலர் ஜனாதிபதிக்கும் புலிப்படைகளின் தளபதி பிரபாகரனுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார். இந்தக் கடிதம் கடந்த புதன் கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட இக் கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்கள் பற்றி அகதிகள் நலன்காக்கும் அமைப்பின் தலைவர் மைக்கல் றோஜேர்ஸ் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

முக்கியமாக வடக்கின் மேல் விதிக்கப்பட்டுள்ள தடையின் காரணமாக நீண்டகாலமாக வடபகுதி மக்கள் படும் துன்பங்கள் பற்றியும், வான்வெளி தாக்குதல்களால் அதிகரித்து வரும் ஆபத்துக்கள் எமது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

எங்களுக்குத் தெரிந்த வகையில் இராணுவம் யாழ்குடாநாட்டைச்சுற்றி வளைக்க முயற்சிப்பதுபோல் தெரிகிறது அப்படியானால் பொதுமக்களுக்கு முன்னரைவிட ஆபத்து அதிகரித்துவிடும்.

வடக்கில் யுத்தம் உச்ச நிலையை எட்டக்கூடும் என்ற அச்சம் கடந்த சில நாட்களாகவே எழுந்துள்ளது. பத்து இலட்சத்திற்கு அதிகமான மக்கள் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் இல்லாமல் வடக்கில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று கூறுகிறார். இந்த நிறுவனங்களின் ஒன்றான அகதிகள் நலன்காக்கும் அமைப்பின் தலைவர் மைக்கல்றொஜேர்ஸ் கூறுகிறார் மேலும், விமானத் தாக்குதல் நடந்து வருவதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

களில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை, மாகோ பகுதியில் கொள்ளையில் ஈடுபட்டு வந்த இரண்டு சிறிலங்கா இராணுவத்தினரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு சிருடையில் மோட்டார் சைக்கிளில் வந்த இந்த இராணுவ வீரர்கள் இருவரையும் பொலி

(4 ஆம் பக்கம் பார்க்க)



அண்மையில், சிறிலங்கா அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக நோர்வேயில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றில் நோர்வே நாட்டுப்பிரஜை ஒருவர் தலைவர் பிரபாகரனின் படத்தைத் தாங்கிச் செல்வதைக் காணலாம்.

# வெலிக்கடை படுகொலை; லண்டனில் கண்டனப் பேரணி

83 யூலையில் வெலிக்கடையில் சிறைவைக்கப்பட்டிருந்த 53 தமிழ் அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்டதையும் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளையும் நினைவுகூரும் முகமாக உலகளாவிய ரீதியில் கண்டன ஊர்வலங்களை நடத்தும்படி லண்டனிலுள்ள உலகத் தமிழர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

லண்டனில் இன்று பிற்பகல் கண்டன ஊர்வலம் ஹைட் பார்க்கில் இருந்து ஆரம்பம் ஆகும்.

83 யூலை வன்முறைகள் மற்றும் வடகிழக்கில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்து லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரிடம் மனு கையளிக்கப்படவுள்ளது.

83 யூலை வன்முறைகளைக் குறிப்பாக குட்டிமணி தங்கத்துரை உட்பட 53 அரசியல் கைதிகள் படுகொலைகளைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் பகுதி சுற்றிவளைப்பு ஒருவர் பலி; ஒருவர் காயம்

(திருமலை)

திருமலை, மூதூர் பகுதிகளைத் திடீரென சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இளைஞர் ஒருவரைச் சுட்டுக் கொன்றதுடன் மற்றொருவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி சம்பூர், இலக்கந்தை, பாட்டாலிபுரம் ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய தோப்பூர் இராணுவத்தினர் தொடுவான் குளம் என்னுமிடத்தில் வைத்து கணபதிப்பிள்ளை இந்திரன் (வயது 16, கொக்கட்டிச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கதிரவெளிப் பகுதியில் நான்கு பெண்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கதிரவெளிப் பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்குநான்கு தமிழ்ப் பெண்களைக் கைதுசெய்து முகாமுக்கு கொண்டு சென்றனர்.

கடந்த இருபதாம் திகதி சதிரவெளி இராணுவத்தினர் திடீரென அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதன்போதே சித்திரவேல் கனகம்மா (கதிரவெளி) இராசையா பாமா (வாகரை) தம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக் கழக புதிய அனுமதி முறை

## ஜனாதிபதி கலந்துகொள்ளும் உயர்மட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதியில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் அனுமதி முறை தொடர்பாக ஜனாதிபதி கலந்து கொள்ளும் உயர்மட்ட மாநாடு ஒன்று விரைவில் கொழும்பில் நடைபெற உள்ளது.

வடக்கு கிழக்குப்பகுதிகளில் நடைபெற்ற விசேட பரீட்சையை தனியாகக்கருகப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இருவெவ்வேறானவெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டிருந்தது. இதன் அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி முறையை வடபகுதி மாணவர்களும் ஏனையோரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இம் முறையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் கல்வி அமைச்சர் என்ற முறையிலும் நாட்டின் ஜனாதிபதி என்றவகையிலும் பிரேமதாசாவுக்கு மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்தே மேற்படி அனுமதி முறை தொடர்பாக ஆராய்வதற்காக மேற்படி மாநாடு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

### துப்பாக்கிப் பிரயோகம்

(குருநகர்)

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் மண்டைதீவுச் சந்தி சிறிலங்கா இராணுவ காவலரண்களில் இருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

ஏறத்தாழ அரை மணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் - இராணுவம் இயக்கச்சியில் மோதல்

## விமானக் குண்டுவீச்சும் இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப்பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. இராணுவத்தினருக்குப்பலத்த இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

நேற்றுக்காலை இயக்கச்சிப் பகுதியில் எறிகணைத்தாக்குதல்களை மேற்கொண்டவாறு முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் முன்னேற விடாது கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர். சுமார் ஒருமணிநேர புலிகளின் உக்கிர தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர்முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு அங்கிருந்து பின்வாங்கிச் சென்றனர்.

இதேவேளை இயக்கச்சி புதுக்காட்டுச்சந்திப் பகுதியில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் 10க்கு மேற்பட்ட குண்டுகளை வீசி தாக்குதல்களை நடாத்தியதாக தெரிய வருகிறது.

புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள்நடாத்திய அகோ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 860 கோடி ரூபா அவசரக் கடனுதவி சிறிலங்காவுக்கு கிடைக்காது போகலாம்

## உலக வங்கியின் நிபந்தனைகளை தாமதப்படுத்தியதன் விளைவு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்க்க 200 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (860 கோடி ரூபா) அவசரமாக தேவைப்படுகிறது. எனினும் இந்நிதியை உலகவங்கியிடமிருந்து பெறுவதில் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கடனை வழங்குவதற்கு உலகவங்கி கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது. இந்நிபந்தனைகளை நிறைவேற்றினால் பலசிக்கலான உணர்வுபூர்வமான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

வங்கிகள் முழுமையாகதனியார் மயப்படுத்தப்படுதல் ஏற்றுமதிகளின் மீது விதிக்கப்படும் சுங்கவரியை 50 வீதத்தில் இருந்து 35 வீதமாக குறைத்தல் டீசல் எரிபொருள்களின் விலையை பெற்றோலின் விலைக்கு சமமாக உயர்த்துதல் என்பன உலக வங்கி விதித்துள்ள நிபந்தனைகளாகும்.

இந்த 200மில். அமெரிக்க டாலர் கடன்1வீத வட்டியையும் திரும்ப செலுத்த 30 வருட கால அவகாசமும் கொண்டதாகும்.

மத்திய வங்கியின் கடந்த வார அறிக்கையின் படி இலங்கையின் கடன்பழு 360.6 பில்லியன் ரூபாய்கள் ஆகும்.

## மாவீரர் நினைவு மண்டபம் றீகன் நகரில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சிற்றம்பலம் (றீகன்)நகரில் இன்று பிற்பகல் 4-00மணிக்கு மாவீரர் நினைவு மண்டபம் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

கப்டன் ஜிம்கலி சனசமூக நிலையத்தலைவரின் தலைமையில்இடம்பெறவுள்ள இவ்விழாவில் யாழ்.மாவட்டத் தளபதி திரு. செல்வராஜா இம்மண்டபத்தைத் திறந்துவைக்கவுள்ளார்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கொடியேற்றிவைப்பார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**நன்னீரை நச்சாக்கினால் கண்ணீரே மிச்சமாகும்**

## வரி விளம்பரம்


**புதிய மீரா நாவல்**

காலத்தைப் பிரதிபலிக்கும் கதைகள், சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் மீரா பிரசுரங்களாக இப்பொழுது வெளிவருகின்றது. ஐந்து நூல்களை வாங்கினால் ரூபா ஐம்பது பெறுமதியான மீரா பிரசுரம் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. [2874]

**தையல் இயந்திரங்கள்**

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும், உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளவும், தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டிவீதி, சாவகச்சேரி. [2876]

**ENGLISH COURSE**

(ஒருங்கமைந்த ஆங்கிலப் பயிற்சி)

ENGLISH GRAMMAR WITH SPOKEN ENGLISH BY KANDASMY

மூன்றுமாதத்தில் 'ஆங்கிலம் பேசப் பயிற்றப்படுகிறது. 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (2884)

**BASIC**

COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE புதிய பிரிவு ஆரம்பம் 25 - 07 - 92 சனி 10.30 மணி I A B. (ALL STAGES). SHORTHAND & TYPING நடைபெறுகின்றன SCHOOL OF BUSINESS ADMINISTRATION 16 3rd Cross Steet Jaffna (4736)


## ஆலய உற்சவம்

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலய வருடாந்தக்கொடியேற்றம் உற்சவம் இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து திருப்பலிப் பூசை, வழிபாடுகள் இடம்பெறும். எதிர்வரும் 27-ம்திகதி திங்கட்கிழமை மாலை திருப்பலிப்பூசை, திருச்சொரூப பவனி என்பவற்றுடன் இந்த உறசவம் முடிவடையும் பூசைகளைப் பாஷையூர் பங்குத் தந்தை நடாத்துவார். (24)

### கூட்டம்

# மாவீரர்களின் தியாகங்கள் மறக்க முடியாதவை -ஞானம்

(வவுனியா)

மாவீரர்களின் தியாகங்கள் மறக்கக்கூடியவைஅல்ல; அவர்கள் எமது மண்ணை மீட்பதற்காக, பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப் பெறுவதற்காக தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

வீரச்சாவடைந்த மாவீரர்களை நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளவேண்டும். அவர்களின் இலட்சியம் உறுதியானது. உன்னதமானது.

கடந்த 21 ஆம் திகதி கோதண்டர் நொச்சிக்குளம் பகுதியில் இடம் பெற்ற மாவீரர் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது வன்னிப் பிராந்திய துணை அரசியல் பொறுப்பாளர் திரு. ஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டுகளின் ஜூலை மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வவுனியா நகரப்பிரதேச மாவீரர்களின் நினைவாக இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது

இக்காலப் பகுதியில் 14 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவுக் கூட்டத்தில் வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. புவிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

பொதுக் கூட்டத்தின் பின்னர் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (தி)

## முல்லை மாவட்டத்திலுள்ள அம்பகாமம் குளம் திருத்தம்

(நமது நிருபர்)

முல்லைத்தீவுமாவட்டத்தில் மாங்குளம் பகுதியிலுள்ள அம்பகாமம் நீர்ப்பாசன குள திருத்த வேலைகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் உள் கட்டுமானப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1990 ஆம் ஆண்டு பெய்த கடும் மழையின் காரணமாக இக் குளத்தின் இடது பக்கக் கரையில் நூறு அடி நீளத்திற்கு ஏற்பட்ட உடைவினைத் திருத்துவதற்கான செலவாக 400, 000 ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த திருத்த வேலையின் மூலம் கடந்த இரு வருடங்களாக நீர்ப்பாசன வசதியைப் பெறமுடியாத நிலையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாதிருந்த 152ஏக்கர் நிலப்பரப்பும் மீள பயிர்ச் செய்கைக்கான நீர்ப்பாசன வசதியைப் பெறுவதுடன் தொழில் பாதிக்கப்பட்டிருந்த பல விவசாயக் குடும்பங்களும் பயனடையவுள்ளன இக்குளத்தின் திருத்த வேலைகள் கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன்மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இக் குளத்தினை திருத்துவதற்கு சிறிலங்கா அரசால் எதுவித முயற்சிகளும் எடுக்கப்படாததினால் கடந்த இரு வருடங்களாக பெரும், சிறுபோக விவசாய முயற்சிகள் இப்பகுதியில் பெரும் பாதிப்படைந்திருந்தன. இந்நிலையிலேயே தமிழீழ ஆய்வு நிறுவனம் இக் குளத்தினைத் திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மேலும். சென்ற வருட இறுதியில் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உள்ள மதவான சிங்கன் குளதிருத்த வேலைகளும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் கறுப்பிக் குள புனரமைப்பும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டதும், மதவான சிங்கன் குளம் திருத்தப்பட்டதனால் 40[illegible] ஏக்கர் நிலப்பரப்பு நீர்ப்பாசன வசதியைப் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 3000ரூபா அலவன்ஸ் தேவை இல்லையேல் வேலைநிறுத்தம்

### மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

மாதமொன்றுக்கு 3000ரூபா இடைக்காலச் சம்பளப்படியகாத் தருவதற்கான பேச்சுவார்த்தையை அரசு விரைவில் ஆரம்பிக்க வேண்டும் தவறினால் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் தாம் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

வாழ்க்கைச் செலவினமும், பணவீக்கமும் அதிகளவில் அதிகரித்துள்ளன. அரச ஊழியர் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினங்களைச் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளார்கள் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கச் செயலர் டாக்டர் ஆர். எல். சத்தரசிங்கி கூறினார்.

மருத்துவ அதிகாரிகளின் சம்பளத் திட்டத்தை மீளாய்வு செய்வதன்முன் இடைக்காலச் சம்பளப் படியாக 3000 ரூபா வழங்கும்படி கோரி சங்கச் செயலர் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்துக்குக் கடிதம் எழுதியுள்ளார்

## வர்த்தகரிடம் பணம் சூறை ஆறு ரெலோவினர் கைது

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி ரெலோ அலு

## மேலும் ஒரு வருட வேலை அனுமதி

தொழிற்கல்வி பயிலுனர்கள் யாழ். செயலகத்தில் மேலும் ஒருவருடம் வேலை செய்ய அனுமதி கிடைத்திருக்கின்றது என யாழ்செயலகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வேலை அடுத்த மாதத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது எனவும் இவர்களுக்கான ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## குழாய்க் கிணறுகள் அமைப்பு

யாழ். மாநகரசபை ''யுனிசெப்'' நிறுவனத்தின் உதவியுடன் மாநகரசபைப் பகுதிகளில் குழாய்க்கிணறுகளை அமைத்து வருகின்றது.

யாழ். திருநகர், கொழும்புத்துறை எழிலூர், பாஷையூர் மகப்பேற்று நிலையம், அரியாலை சனசமூக நிலையம், குருநகர் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில்இக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.


யாழ். பல்கலைக் கழகம்

யாழ். பல்கலைக் கழக ஆய்வு

**நூல்களின் விற்பனை**

யாழ். பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளைப் பிரசுரங்களாக வெளியிட்டு அவற்றை விற்பனை செய்து வருகின்றது. இதனடிப்படையில்பின்வரும் வெளியீடுகள் யாழ். பல்கலைக்கழக வரவேற்புப் பகுதியில் விற்பனைக்குள்ளது.

1. பண்டைய தமிழகம் - கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம்
   பிரதி ஒன்று ரூபா. 375/-
   சாதாரண தபால் செலவு ரூபா. 20/-
2. நூலகவியலில் பட்டியலாக்கம் - திருமதி வி. பாலசுந்தரம்
   பிரதி ஒன்று ரூபா. 60 -
   சாதாரண தபாற் செலவு ரூபா. 10 -
3. வித்துவசிரோமணி கணேசையரின்வாழ்க்கையும் பணியும் - திரு. எஸ். சிவலிங்கராசா
   பிரதிஒன்றுரூபா.30/-
   சாதாரண தபாற் செலவு ரூபா.10/-

இதனை தபாற் கட்டளை காசுக் கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சாதாரணதபால் செலவைமேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தபாற் கட்டளை / காசுக்கட்டளை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி'4749)

அரசாங்க அறிவித்தல்

**சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்**

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 2 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் அரசாங்க அலுவலகமாகவும் மார்பு நோய் சிகிச்சை நிலையமாகவும் பயன்படுத்துவதற்கு உகந்ததும் 2500 சதுர அடிகளுக்கு குறையாத இடவசதியும் தண்ணீர் மலசலகூட வசதி கொண்டதுமான கட்டடம் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்,
இல: 57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி'4761)


## நினைவுகூருகின்றோம். 1992 - 07 - 25

1983 ஆம் ஆண்டு இதே தினத்தில் வெலிக்கடைச் சிறையில் சிறை அதிகாரிகளின் உதவியுடன் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட -

புறோக்கர் [சோ. சதீஸ்வரன் - அச்சுவேலி]

புத்தூர் மாமா (தாமு கந்தையா - புத்தூர் கிழக்கு)

- இராசகிளி (கிருஸ்ணபிள்ளை நாகராசா - கட்டைபறிச்சான், மூதூர், திருக்கோணமலை)
- தங்கத்துரை [நடராசா தங்கவேல் - தொண்டமானாறு]
- குட்டிமணி [செல்வராசா யோகச்சந்திரன் - வல்வெட்டித்துறை]
- ஜெகன் [கணேசானந்தன் ஜெகநாதன் - 'கணேச பவன்', தொண்டமானாறு]
- செனட்டர் , நடேசதாசன் [ வைத்தியலிங்கம் நடேசதாசன் -சிவன்கோயிலடி, வல்வெட்டித்துறை]
- தேவன் வெள்ளமாமா [செல்வததுரை சிவசுப்பிரமணியம் - வளலாய், அச்சுவேலி]
- சிவபாதம் மாஸ்ரர் [நவரத்தினம் சிவபாதம் - பத்தமேனி, அச்சுவேலி]

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் பல தமிழ் இளைஞர்கள், போராளிகள்.

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பரந்தன் - கண்டாவளையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை புலோலி தெற்கு சாளம்பையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், யாழ். செயலக ஊழியரான அரியாலையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1986 ஆம் ஆண்டு திருக்கோணமலை ஆலிம்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ நசீம் / கஜன் [அப்துல் மனாப் முகமது நசீம் - மூதூர், திருக்கோணமலை]

மன்னாரில் சுவரொட்டி ஒட்டும்போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ அசோக் [பெருமாள் யோகநாதன் - சாவற்காடு, மன்னார்]

1987 ஆம் ஆண்டு

## வீரவேங்கை அரசப்பன்

(யோ. தயாளன் இம்மனுவேல்)

மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

மாதமொன்றுக்கு 3000ரூபா இடைக்காலச் சம்பளப்படியகாத் தருவதற்கான பேச்சுவார்த்தையை அரசு விரைவில் ஆரம்பிக்க வேண்டும் தவறினால் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் தாம் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

வாழ்க்கைச் செலவினமும், பணவீக்கமும் அதிகளவில் அதிகரித்துள்ளன. அரச ஊழியர் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினங்களைச் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளார்கள் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கச் செயலர் டாக்டர் ஆர். எல். சத்தரசிங்கி கூறினார்.

மருத்துவ அதிகாரிகளின் சம்பளத் திட்டத்தை மீளாய்வு செய்வதன்முன் இடைக்காலச் சம்பளப் படியாக 3000 ரூபா வழங்கும்படி கோரி சங்கச் செயலர் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்துக்குக் கடிதம் எழுதியுள்ளார்

# ஆலய உற்சவம்

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலய வருடாந்தக்கொடியேற்றம் உற்சவம் இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து திருப்பலிப் பூசை,வழிபாடுகள் இடம் பெறும். எதிர்வரும் 27-ம்திகதி திங்கட்கிழமை மாலை திருப்பலிப்பூசை, திருச்சொரூப பவனி என்பவற்றுடன் இந்த உறசவம் முடிவடையும் பூசைகளைப் பாஷையூர் பங்குத் தந்தை நடாத்துவார். (24)

## கூட்டம்

(கொழும்புத்துறை)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதாரம், தொண்டர் சேவை பற்றிய ஒழுங்குகளைக் கவனிக்கும் முகமாக ஆலோசனைக் கூட்டமொன்று இன்று 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் (வை.எம்.சீ.ஏ. அருகில்) சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

★

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும்30-ம் திகதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ். செயலகத்தில் உள்ள ஆலோசனை மண்டபத்தில் நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## கண்டெடுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்தியகல்லூரி விளையாட்டு மைதானத்திலிருந்து ''தங்கப்பதக்கம்'' ஒன்று கண்டெடுக்கப்பட்டு அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

சுன்னாகம் புனிதஅந்தோனியார் வீதியைச் சேர்ந்த மனோகரன் கெங்கேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் பல்கலைக்கழக அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

# வர்த்தகரிடம் பணம் சூறை ஆறு ரெலோவினர் கைது

(கொழும்பு)

கொழும்பில் ஆட்களைக் கடத்துதல் வர்த்தகர்களிடம் பணம் பறித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆறு ரெலோ உறுப்பினர்களை சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

புறக்கோட்டைப் பகுதி வர்த்தகரான கதிரேசன் சுப்பிரமணியம் என்பவர் பொலிசில் புகார் செய்ததை அடுத்தே கொள்ளுப்பிட்டி ரெலோ அலுவலகத்தில் வைத்து ஆறு பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

அவசரகாலசட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்கள் மேலதிக மாவட்ட நீதிபதி சரத் அபேயபிட்டிய முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி இவர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 20 — 10 — 1975



தாயக மண்ணில் 25 — 06 — 1992

## வீரவேங்கை புகழரசன்

(பொன்னையா சுதர்சன்)

தமிழீழ நாடமைக்கத்
தம்பியணி யிணைந்து நின்று
அமுதத் தமிழ் காத்த சுதர்சா!
அடல் வீரங் கண்ட புலியே!
நிமிர்ந்து நிற்கின்றோம்
நின் வழியில் தொடர்கின்றோம்
நினைவில் நீங்காதுன் பாசம்

கோப்பாய், வடக்கு.

—குடும்பத்தவர்—

(2890)

...கின்றது. (பா)

# குழாய்க் கிணறுகள் அமைப்பு

யாழ். மாநகரசபை ''யுனிசெப்'' நிறுவனத்தின் உதவியுடன் மாநகரசபைப் பகுதிகளில் குழாய்க்கிணறுகளை அமைத்து வருகின்றது.

யாழ். திருநகர், கொழும்புத்துறை எழிலூர், பாஷையூர் மகப்பேற்று நிலையம், அரியாலை சனசமூக நிலையம், குருநகர் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில்இக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

விரும்புபவர்கள் சாதாரணதபால் செலவைமேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தபாற் கட்டளை / காசுக்கட்டளை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி'4749)

## வீரவேங்கை அரசப்பன்

(யோ. தயாளன் இம்மனுவேல்)



ஆறாத்துயரின்

மீளாத்துயிலின்

**45ஆம் நாள்**

பெற்றவர் மகிழ
24-03-1974
பிறந்த மண் வாழ
11-06-1992

தம்பி தம்பி என்று, தவமிருந்து பெற்றெடுத்த
தந்தை தாய் பாசம், மறந்தனையோ.
தம்பி அண்ணா என்று, நாவினிக்க அழைத்திட்ட
சோதரர் பாசம் தான், துறந்தனையோ.
தம்பி என்றழைக்கவொரு, நம்பி இல்லையென்ற
சிந்தனை தான் மனதில், தோன்றல்லையோ.
தமிழ் மானம் காத்திட வேண்டுமென்ற,
தன் மானம் தான், கொண்டனையோ
தாய் மண்ணை மீட்க வேண்டுமென்ற,
தாகம் தான் உனை ஆட்கொண்டதுவோ
வீரவேங்கையாகி வீறு கொண்டெழுந்தனையோ
பாரசிலுவை நிகர், துவக்கதனை தோளேந்தினையோ
பரம சுதன் வழி நின்று, பலிக்கத்தான் நடந்தனையோ
பரம்பொருளார் பதமதனைப்,பற்றிப் பிடித்தனையோ
பாடிடுவாய் அவர் புகழை, பரிந்திடுவாய் எம்மவர்க்காய்
மண் மீட்பிற்காய்

பிறந்த மண் வாழ தம்முயிர் துறந்து விதையாகிய அனைத்துப் போராளிகளையும் நினைவுகூர்வோம்.

சில்லாலை

குலக்கொழுந்தை இழந்து துடிக்கும்
குடும்பத்தினர்

(சி-4751)

பத்தமேனி, அச்சுவேலி]

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் பல தமிழ் இளைஞர்கள், போராளிகள்.

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பரந்தன் - கண்டாவளையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை புலோலி தெற்கு சாளம்பையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், யாழ். செயலக ஊழியரான அரியாலையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1986 ஆம் ஆண்டு திருக்கோணமலை ஆலிம்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **நசீம் / கஜன்** [அப்துல் மனாப் முகமது நசீம் - மூதூர், திருக்கோணமலை]

மன்னாரில் சுவரொட்டி ஒட்டும்போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **அசோக்** [பெருமாள் யோகநாதன் - சாவற்காடு, மன்னார்]

1987 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**யோகன்** [ஐயாத்துரை யோகேந்திரன் - புன்னாலைக் கட்டுவன்]

1989 ஆம் ஆண்டு வடமராட்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 பெண்கள் உட்பட 5 தமிழர்கள்.

கறுகலேரியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**புரி** (அழகையா சிவசிதம்பரம் - அளம்பில், மணலாறு)

முல்லைத்தீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிமோதலில் வீரச்சாவெய்திய -

**யசோ** (ராஜ்குமார் - வல்வெட்டித்துறை)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த 4 - தமிழர்கள்

நெல்லியடியில், இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த அரிசி ஆலை ஒன்றின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து, யாழ்-மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

**தேவா** (சி. சந்திரமோகன் - வாகரை, மட்டக்களப்பு)

ஆனையிறவில்,சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**அகிலன்** (வேலுப்பிள்ளை கந்தசாமி - கோயில் புளியங்குளம், நெடுங்கேணி, மணலாறு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது, படுகொலை செய்யப்பட்ட விவசாயியான வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

✲ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் எமது அமைப்பைச் சாராமல் தாயக விடுதலைக்காகப் போராடியவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி.'4758]

### சிந்தனைக்கு

உண்மை தனக்குத் தெரிந்தபோது அதை உரத்துக் கூவாதவன், பொய்யர்கள், போலிகளை உற்பத்தி செய்யும் மோசடிக்காரர்கள் ஆகியோருக்கு உடந்தையாகி விடுகிறான்.

— சார்ல்ஸ் பெனா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25- 07- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## உண்மையை வெளியிட்ட அமைச்சர் ரணசிங்கா

"பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க மாட்டாது. அந்தக் குழுவில் பங்கு கொள்ளும் கட்சிகள் தமக்கு அரசியல் லாபம் தேடவே முனைகின்றன. அரசியல்வாதிகளுக்கு வேண்டியதெல்லாம் அதிகாரமே. ஐ. தே. க. என்ன செய்யப் போகிறதென சுதந்திரக் கட்சியும், சுதந்திரக்கட்சி என்ன சொல்லப் போகிறதென ஐ. தே. க. வும் எண்ணிக் கொண்டிருப்பதால் தெரிவுக்குழு மூலம் ஓர் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது." இவ்வாறு தகவல் துறை அமைச்சர் திரு. ஏ. ஜே. ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு பிரச்சினைக்கு தீர்வு காணாது என்பது புதிய கண்டுபிடிப்பொன்றல்ல. ஆனால், ஓர் அமைச்சர் பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வு தராது என்பதும், அதற்குப் பங்குபற்றும் கட்சிகளே காரணம் எனவும் தெரிவித்துள்ளமைதான் முதன்மையானதாகும்.

அமைச்சரின் இக்கூற்றிலிருந்து சிங்களக் கட்சிகளின் நிலைப்பாடு தெளிவாகத் தெரிகிறது அதிலும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு தெளிவாக வெளிவந்துள்ளது அதாவது அரசியல் தீர்வு குறித்து ஐ தே. கட்சி எதுவித கரிசனையும் கொண்டிருக்கவில்லை தற்பொழுதுதான் இனப்பிரச்சினைத் குறித்து ஆராய பிரதமர் டி. பி. விஜயதுங்கா தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளது.

ஆனால், இக்குழுவும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான தீர்வொன்றை முன்வைக்க அமைக்கப்படவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வுதொடர்பாக கொழும்பில் தரித்துள்ள தமிழ்க் குழுக்களுக்கும், சிங்கள அரசியற் கட்சிகளுக்கும் இடையில் எழுந்த முரண்பாட்டால் ஏற்பட்டதாகும் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கிலும் இராணுவ நடவடிக்கைக்கான கால அவகாசம் வழங்குவதற்குமாகவே ஐக்கிய தேசியக் கட்சி இக்குழுவை நியமித்துள்ளது.

—அணு, இரசாயன ஆயுதங்களுக்கு மட்டுமல்ல—

# மரபுவழி ஆயுதங்களின் பாவனைக்கும்; சர்வதேச சட்டங்களில் விதிமுறை உண்டு

அணுவாயுத தாக்குதல்களும் இரசாயன ஆயுதப் பாவனைகளும் மட்டுமே சட்டத்தினால் தடுக்கப்பட்டவை என நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். யுத்த தொடர்பில் சர்வதேச சட்டத்தின் ஏற்பாடுகள் இவ்விரண்டு ஆயுத பாவனைகளை மட்டுமன்றிச் சாதாரண மரபார்ந்த ஆயுதங்களையும் கண்மூடித்தனமாகப் பிரயோகிப்பதைத் தடை செய்கின்றன. சட்டம் விதிக்கும் இத்தடைகளுக்கான அடிப்படைக் காரணம் ஒன்றேதான். அதாவது தேவையற்ற விதத்தில் பொது மக்கள் பாதிப்புக்குட்படக் கூடாதென்பதே. பொது மக்கள் நிச்சயம் பாதிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் அணுவாயுத, இரசாயன ஆயுத பிரயோகங்களினால் மட்டுமன்றி விமான, தரைப்படையினரின் குண்டுத் தாக்குதல்களினாலும் ஏற்படுகின்றமை அண்மைக்கால நிகழ்வுகளாகும்.

ஒரு சாதாரண கட்டடத்தைக் கைப்பற்றுவதற்காக நூறு குடிமக்களைக் கொல்வதும் ஒரு நகரைக் கைப்பற்ற அணுகுண்டை வீசுவதுப் ஒத்த செயல்களே என்பது சட்டத்தின் கணிப்பு.

### நியாய சபைகளின் தீர்ப்பு

இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இருந்தே இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் ஏற்பாடுகளை அரசுகள் பின்பற்றி வந்துள்ளன. வழக்காறு என உருவாகிச் சட்ட வடிவம் பெற்றுள்ள ஏற்பாடுகளின்படி அளவுக்கு அதிகமான உபாதையினை ஏற்படுத்தும் ஆயுதப் பிரயோகமும் போர் வீரர்களையும் குடிமக்களையும் வேறுபாடின்றி அழிக்கும் தாக்குதல்களும் குறிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளன. இத்தகைய தாக்குதல்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையைவிட உயிர் பிழைத்தோர் அனுபவிக்கும் வேதனைகளையே கவனத்தில் கொள்ள வேண்டும் என இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அமைக்கப்பட்ட சில நியாய சபைகள் தீர்ப்பும் வழங்கியுள்ளன.

[illegible]

...நாடுகளினாலும் ஏற்கப்பட்டு ஏற்கனவே இருந்து வந்தவையே.

பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பிரயோகிக்க முன்னர் - மாற்று வழி ஏதேனும் இருக்கின்றதா என்பதை ஆராய்வது சட்டக் கடப்பாடாகும். அத்தோடு குறிப்பிட்ட தாக்குதல்களினால் குடிமக்கள் கொல்லப்படும்அபாயம் இருக்கும் போது இந்தக் கடப்பாடு கண்டிப்பாக பின் பற்றப்படவேண்டியதாகிறது.

தற்கால படையணிகளில் எதிரிகளின் போர்க் கப்பல்களைத் தாக்கும் சமயங்கள் தவிர்ந்த ஏனைய போதிலெல்லாம் குடிமக்களும் சேர்ந்து இறப்பது நிச்சயமானதொன்றாகும். எனவே எந்த இலக்கினை மீட்க கைப்பற்ற அல்லது ஈட்ட யுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதோ அந்த இலக்கு ஏற்படவுள்ள அழிவை நியாயப்படுத்தப் போதுமானதா என்பதைப் பல தடவை ஆராயும் அவசியம் அரசியல் தலைவர்கள் மீதும் இராணுவத் தலைமையின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டுகள் தொடர்பாக அமெரிக்கா காட்ட முனைந்தநியாயங்களை ஆராய்வது பொருத்தமானதாகும்.

ஜனாதிபதிஹரிரூமன் மூன்று காரணங்களை முன்வைத்து தாக்குதலை நியாயப்படுத்த முனைந்தார்.

பாரிய இழப்புக்களைத் தொடரச் செய்யும் யுத்தத்தினை உடனடியாக முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் மேலும் (அமெரிக்க) உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படுகின்றன.

பேர்ள் துறைமுகத்தை தாக்கியதன் மூலம் துரோகமிழைத்தமைக்கும் அமெரிக்க சிறைக் கைதிகளைக் கொடுமைப்படுத்தியதற்கும் அணுகுண்டுதான் உரியபதிலடி.

மேலும் ஜப்பான் ஏற்கனவே யுத்தச்சட்டங்களைமீறிவிட்டபடியால் அதே விதத்தில் பதிலளிப்பதே சரியான வழி: இராணுவ இலக்குகளை மட்டும் தாக்கும் படியும் குடிமக்கள் கொல்லப்படுவதை இயன்றளவு தவிர்க்கும் படியும் விமானிகளுக்கு கண்டிப்பான அறி...

...ணாகதி அடையும்படி ஜப்பானுக்கு இறுதி எச்சரிக்கை அமெரிக்காவினால் வழங்கப்பட்டுள்ளமையினால் மேற்கொண்டு ஏற்படவுள்ள அழிவுகளுக்கு அமெரிக்காவை பொறுப்பாக்கக் கூடாதெனவும் வலியுறுத்தினார். விமானத்தில் இருந்து போதியளவுக்கு துண்டுப் பிரசுரங்கள் ஜப்பானிய நகரங்கள் மீது வீசப்பட்டுள்ளமையால் குடிமக்கள் நகரங்களை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

அமெரிக்காவில் அப்போது யுத்தகால செயலராக இருந்த எச். எல். ஸ்ரிம்சன் யுத்தம் தொடர்ந்தால் அமெரிக்கரில் மட்டும் பத்து இலட்சம் பேர் இறக்க வேண்டி வரும் என்றார். இத்தோடு நேச நாட்டுப்படையில் இறப்போரின் எண்ணிக்கையையும் ஜப்பானிய படைவீரர்களது இறப்புத் தொகையையும் சேர்த்துப் பார்க்கும் போது அணுகுண்டு வீசி யுத்தத்தை முடிவுறுத்துவதில் தவறில்லை என அவர் கருதியிருந்தார்.

உண்மையில் ஜப்பானிய படைகள் தாம் தோல்வியை நெருங்குவதை உணர்ந்திருந்தன. அவர்கள் நிபந்தனையற்ற சரணாகதியென்ற முடிவை எடுக்கத் துணியாததற்கு இரண்டு காரணங்கள்; ஜப்பானியச் சக்கரவர்த்தி ஹிரோகிற்றோவின் இறைமைத் தத்துவம் பங்கமுறும் என்பதும் தமது படைகளது இராணுவ கௌரவம் களங்கமுறும் என்பதுமே இக்காரணங்கள். ஜப்பனிய படைகளது நெஞ்சுரத்தையும் இராணுவ கௌரவத்தையும் மதித்த சேர்ச்சில் கூட அணுகுண்டுத் தாக்குதல் "கௌரவமான முறையில்" ஜப்பானியப் படைகள் யுத்தத்தைக் கைவிட வழிவகுக்கும் என்றே குறிப்பிட்டுள்ளார்

ஆனால் ரூமனோ எனில் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியபின் ஜப்பானிய படைகளுக்கு ஏது இராணுவ கௌரவமென்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தார். எந்த விதத்திலும் தாக்குதல் நடத்தி எதிரிகளை சரணடையத் தூண்டுவது என்பது யுத்தச் சட்டங்களுக்கு விரோதமானது. அளவிறந்த வேத...

...றனர். இந்த ஒரு லட்சம் பேரும் அனுபவித்த உபாதைகளை அளவிட ஒருவராலுமே முடிந்ததில்லை இதற்கிணையான இராணுவ வெற்றியை ரூமன் பெற்றாரா? என்பதும் இதே வெற்றியை வேறு வழிகளில் பெற்றிருக்க முடியாதா? என்பதும் ஆராயப்பட்டு தற்போதைய யுத்த விதிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக கொள்ளப்படுகின்றன. ஜப்பான் சரணடையத் தயக்கம் காட்டிய இரண்டு நிபந்தனைகளையும் நேசநாடுகள் ஏற்றிருந்தால் அணுகுண்டு வீச்சு அகராதியில் இடம் பெறாமல் போயிருக்கலாம்.

ஜப்பானின் விசேட தூதுவர் ஒருவர் ஸ்டாலினைச் சந்திக்கச்சென்று சரணடைவதற்கான நிபந்தனைகளைப் பேசுவதில் ஈடுபட்டிருந்தார் என்பதும் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் நேசநாடுகள் விட்டுக்கொடுக்காத போக்கைக்காட்டின.

### துண்டுப் பிரசுரங்கள் வேடிக்கை விளையாட்டு

குடிமக்களை எச்சரிக்கும் துண்டுப்பிரசுரங்களை வீசும் நடவடிக்கை ஒரு வேடிக்கை விளையாட்டாகவேமக்களால் கருதப்படுவது வழக்கமாகி விட்டது. குறிப்பாக மக்கள் செறிவார்ந்த நகரங்களில் கரந்துறையும் கெரில்லாக்களைத் தாக்குவதற்கு இப்பிரசுர எச்சரிக்கைகள் பயனளிக்கவே முடியாதெனலாம் மக்கள் நகர்வுக்கேற்றபடி கெரில்லாக்களும் இடம் மாறிவிடுவர் என்பது இராணுவ அதிகாரிகள் அறியாத தொன்றல்ல. மறுபுறத்தில் இந்த எச்சரிக்கைகளுக்கு செவிசாய்த்து மக்கள் புகலிடம் தேடி நகர்கின்றார்களா என்பதும் பாரிய வினாவாகிறது.

ஹிரோசிமாவில் அணுகுண்டுத்தாக்குதலில் உயிர் பிழைத்த சிசுக்ஹோ ஹிஜிமா பின்வருமாறு கூறுகிறார்.

அமெரிக்காவின் விமானம் ஒன்று திடீரென வந்து பிரசுரங்களை வீசியது. நானாக எதையுமே எடுத்து வாசிக்கவில்லை. எங்களை நகரத்தை விட்டு ஓடும்படி அதில் கூறப்பட்டுள்ளதாக எனக்குச் சொல்லப்பட்டது. எங்கள்...

...தாகவே இருந்திருக்கும். ஏனெனில் ஜப்பானிய இராணுவம் வெல்லப்பட முடியாததென உறுதியுடன் நம்பியிருந்தோம் நாம். எனவே வாசித்த பின்னரும் நகரத்தை விட்டு நீங்கியிருப்போம் எனக் கூற முடியாது"

இவரது கூற்று குடிமக்களது உண்மையான மனோநிலையை அப்பட்டமாக காட்டுகிறது ஆயின் கெரில்லா யுத்த முறைக்குள் அகப்பட்டிருக்கும் குடிமக்களது நிலை பற்றி கூறவும் வேண்டுமா?

### பாக்தாத்தில் 'ஸ்மார்ட்' குண்டுகள்:-

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பெரிதாக பிரஸ்தாபித்த 'ஸ்மார்ட்' குண்டுகள் கூடபாக்தாத்தில்குடிமக்களை எப்படிப்பதம் பார்த்தன என்பதை வீடியோ கசட்டுக்கள் தற்போது அமெரிக்கா முழுவதும் காட்டி வருகின்றன. ஹாவார்ட் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாணவர்கள் குழு ஒன்று ஈராக் சென்று நடத்திய ஆய்வின் முடிவுகளை நியாயப்படுத்தும் வகையில் பதுங்குகுழியில் சிக்குண்ட பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்த சம்பவங்களை வீடியோவில் காணும்போது 'சட்டவிரோதமான' தாக்குதல்களே அவை என்ற முடிவுக்கு வராமலிருக்க முடிவதில்லை போர் வீரர்களைத்தேடி அழிக்கும் குண்டுகள் பற்றி அமெரிக்கா மார்தட்டினாலும் இன்னும் அவை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை.

பொதுவான ஒரு விளைவு கருதி (நிராயுதபாணிகளாக்குதல். பேச்சுவார்த்தைக்கு வரத் தூண்டுதல், தீர்வொன்றை ஏற்கச் சம்மதிக்கவைத்தல் சரணடையத் தூண்டுதல் போன்றவற்றில் எதற்காக வேனும்) தாக்குதல்நடத்தி அதில் கணிசமான அளவு பொதுமக்களும் ஆயுதம் தாங்கியவர்களும்இறந்தால் அத்தாக்குதல் (சர்வதேச)யுத்த நியதிகளுக்கு முரணானதாகும் என்பதில் ஐயமில்லை இதில்சம்பந்தப்பட்ட தரப்பினர்களோடு பின்னர் பேச்சுவார்த்தை நடத்தும் எண்ணமிருத்தல், பங்குபற்ற அனுமதித்தல் போன்றவற்றினைக் கருத்திற் கொள்ளுமிடத்து மாற்று வழி...

அமைச்சரின் இக்கூற்றிலிருந்து சிங்களக் கட்சிகளின் நிலைப்பாடு தெளிவாகத் தெரிகிறது அதிலும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு தெளிவாக வெளிவந்துள்ளது அதாவது அரசியல் தீர்வு குறித்து ஐ. தே. கட்சி எதுவித கரிசனையும் கொண்டிருக்கவில்லை தற்பொழுதுதான் இனப்பிரச்சினைத் குறித்து ஆராய பிரதமர் டி. பி. விஜயதுங்கா தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளது.

ஆனால், இக்குழுவும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான தீர்வொன்றை முன்வைக்க அமைக்கப்படவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வுதொடர்பாக கொழும்பில் தரித்துள்ள தமிழ்க் குழுக்களுக்கும், சிங்கள அரசியற் கட்சிகளுக்கும் இடையில் எழுந்த முரண்பாட்டால் ஏற்பட்டதாகும் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கிலும் இராணுவ நடவடிக்கைக்கான கால அவகாசம் வழங்குவதற்குமாகவே ஐக்கிய தேசியக் கட்சி இக்குழுவை நியமித்துள்ளது.

அதாவது அமைச்சர் ரணசிங்கா கூறியிருப்பது போல், கட்சிகள் தமது அரசியல் லாபம் ஒன்றே நோக்கமாகக் கொண்டு இருப்பதனால் தெரிவுக் குழு எப்பொழுதுமே தீர்வு ஒன்றை எட்ட முடியாது. ஆனால், தனியாக அமைச்சர் கூறியதுமட்டும் காரணமல்ல, பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அமைப்பே பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக அமைக்கப்படவில்லை.

முதலாவதாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரச்சினையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் முற்படவில்லை. அதாவது பிரச்சினை குறித்து யாருடன் பேச வேண்டுமோ அவர்களைக் கலந்து கொள்ளச் செய்வதற்கான சூழலை உருவாக்கவில்லை.

அடுத்ததாக பிரச்சினைக்குரியவர்களுக்குப் பேச்சின்போது சமஅந்தஸ்து வழங்கப்படவில்லை. அதாவது, சம அந்தஸ்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளே எப்பொழுதும் வெற்றி அளிக்கக் கூடியதாகும். அதாவது, பாராளுமன்றத் தெரிவுக் குழு பாராளுமன்ற பிரதிநிதித்துவ வீதாசாரத்திலிருந்து எதுவித மாற்றமும் பெறவில்லை.

அத்தோடு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆரம்பிக்கப்பட்ட வேளையில் இருந்து அக்குழுவில் இருந்தவர்கள் உட்பட எவருமே இக்குழு தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கும் என நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இதை நிரூபிப்பது போன்று சிங்கள அரசியற் கட்சிகளும் நடந்து கொண்டன.

இறுதியாக தமிழர் தரப்பில் வைக்கப்பட்ட மிகக் குறைந்தளவு தீர்வுத் திட்டத்தினைகொள்கை அளவில்தானும் ஏற்றுக் கொள்ள தெரிவுக்குழு உறுப்பினர்கள் தயாராக இருக்கவில்லை.

மேற்கூறப்பட்ட நிலைமையானது பாராளுமன்றக்குழு உருப் பெற்றதிலிருந்தே இதனால் தீர்வை எட்ட முடியாது என்பதைத் தெளிவாகக் காட்டப் போதுமானதாக இருந்தன. இதனைச் சிங்கள கட்சிகள் தெளிவாகப் புரிந்திருந்தன. தமிழ் மக்களும் தெளிவாகப் புரிந்திருந்தனர். ஆனால் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள்தான் புரிந்து கொள்ளச் சிரமப்பட்டன. தற்பொழுது சிங்கள அமைச்சர் ரணசிங்கா கூறிய பிறகாவது புரிந்து கொள்வார்களா?

---

இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இருந்தே இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் ஏற்பாடுகளை அரசுகள் பின்பற்றி வந்துள்ளன. வழக்காறு என உருவாகிச் சட்ட வடிவம் பெற்றுள்ள ஏற்பாடுகளின்படி அளவுக்கு அதிகமான உபாதையினை ஏற்படுத்தும் ஆயுதப் பிரயோகமும் போர் வீரர்களையும் குடிமக்களையும் வேறுபாடின்றிஅழிக்கும் தாக்குதல்களும் குறிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளன. இத்தகைய தாக்குதல்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையைவிட உயிர் பிழைத்தோர் அனுபவிக்கும் வேதனைகளையே கவனத்தில் கொள்ள வேண்டும் என இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அமைக்கப்பட்ட சில நியாய சபைகள் தீர்ப்பும் வழங்கியுள்ளன.

1945 ஆகஸ்ட் ஆறில்ஹிரோசிமாவிலும் ஆகஸ்ட் ஒன்பதில் நாகசாயிலும் அணுகுண்டுகள வீசப்பட்டன. தற்போதிருப்பதைப் போல அணுவாயுதத் தடை ஒப்பந்தங்கள் ஏதும் அவ்வேளை இருந்திருக்கவில்லை ஆயினும் மேலே குறிப்பிட்ட இருவிதத் தடைகள் அதாவது அளவிறந்த வேதனை, குடிமக்களும் கொல்லப்படும சாத்தியம் என்றளவிலான தடைகள் எல்லா காரணங்களை முன்வைத்து தாக்குதலை நியாயப்படுத்த முனைந்தார்.

பாரிய இழப்புக்களைத் தொடரச் செய்யும் யுத்தத்தினை உடனடியாக முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் மேலும் (அமெரிக்க) உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படுகின்றன.

பேர்ள் துறைமுகத்தை தாக்கியதன் மூலம் துரோகமிழைத்தமைக்கும் அமெரிக்க சிறைக் கைதிகளைக் கொடுமைப்படித்தியதற்கும் அணுகுண்டுதான் உரியபதிலடி.

மேலும் ஜப்பான் ஏற்கனவே யுத்தச்சட்டங்களைமீறிவிட்ட படியால் அதே விதத்தில் பதிலளிப்பதே சரியான வழி: இராணுவ இலக்குகளை மட்டும் தாக்கும் படியும் குடிமக்கள் கொல்லப்படுவதை இயன்றளவு தவிர்க்கும் படியும் விமானிகளுக்கு கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை. துரதிர்ஷ்டவசமாக இந்த மூன்று காரணங்களுமே சட்டப்படி நியாயப்படுத்த முடியாதென இப்போது அறிஞர்கள் நிறுவி உள்ளனர்.

ரூமன் மேலும் ஒதிநிகை யில் ஜப்பானின் பூரண அழிவுக்கும் அதன் ஆயுதப்படைகளின் சாம்பல் மேட்டிற்கும் வழிசமைக்காது ஜூலை 27, 1945-க்கு முன் பூரண சரகிற்றோவின் இறைமைத் தத்துவம் பங்கமுறும் என்பதும் தமது படைகளது இராணுவ கௌரவம் களங்கமுறும் என்பதுமே இக்காரணங்கள். ஜப்பானிய படைகளது நெஞ்சுரத்தையும் இராணுவ கௌரவத்தையும் மதித்த சேர்ச்சில் கூட அணுகுண்டுத் தாக்குதல் ''கௌரவமான முறையில்'' ஜப்பானியப் படைகள் யுத்தத்தை கைவிட வழிவகுக்கும் என்றே குறிப்பிட்டுள்ளார்

ஆனால் ரூமனோ எனில் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியபின் ஜப்பானிய படைகளுக்கு ஏது இராணுவ கௌரவமென்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தார். எந்த விதத்திலும் தாக்குதல் நடத்தி எதிரிகளை சரணடையத் தூண்டுவது என்பது யுத்தச் சட்டங்களுக்கு விரோதமானது. அளவிறந்த வேதனையை போர்வீரர்களோ குடிமக்களோ பெறக் கூடாது. என்ற கண்டிப்பான தடைகளை ரூமன் வெறுமனே உயிரிழப்பு எண்ணிக்கையினைக் காட்டி நியாயப்படுத்தமுனைந்தது தோல்வியையே தந்துள்ளது.

ஹிரோசிமாவில் 48.000 பேரும் நாகசாகியில் 23.000 பேரும் இறந்தனர் மொத்தத்தில் இருநகரங்களில் மட்டும் ஒருலட்சம் பேர் படுகாயமுற்று தாக்குவதற்கு இப்பிரசுர எச்சரிக்கைகள் பயனளிக்கவே முடியாதெனலாம் மக்கள் நகர்வுக்கேற்றபடி கெரில்லாக்களும் இடம் மாறிவிடுவர் என்பது இராணுவ அதிகாரிகள் அறியாத தொன்றல்ல. மறுபுறத்தில் இந்த எச்சரிக்கைகளுக்கு செவிசாய்த்து மக்கள் புகலிடம் தேடி நகர்கின்றார்களா என்பதும் பாரிய வினாவாகிறது.

ஹிரோசிமாவில் அணுகுண்டுத்தாக்குதலில் உயிர் பிழைத்த சிசுக்ஹோ ஹிஜிமா பின்வருமாறு கூறுகிறார்.

அமெரிக்காவின் விமானம் ஒன்று திடீரென வந்து பிரசுரங்களை வீசியது. நானாக எதையுமே எடுத்து வாசிக்கவில்லை. எங்களை நகரத்தை விட்டு ஓடும்படி அதில் கூறப்பட்டுள்ளதாக எனக்குச் சொல்லப்பட்டது. எங்கள் இராணுவப் பொலிசார் நாங்கள் அவற்றை வாசிப்பதை அனுமதிக்கவில்லை. அவற்றை ஒன்றும் விடாமல் திரட்டி தங்களிடம் ஒப்படைக்கும் படி கட்டளையிட்டார்கள் அமெரிக்க பிசாசுகளும் ஆங்கிலேயக் காட்டு மிராண்டிகளும் எங்களுக்கு எதிராக வைத்துள்ள மற்றொரு பொறியே இப்பிரசுரங்கள் என்றனர் பொலிசார். அவற்றை வாசித்திருந்தால் அது நேரத்தை வீணடிப்ப வீரர்களைத்தேடி அழிக்கும் குண்டுகள் பற்றி அமெரிக்கா மார்தட்டினாலும் இன்னும் அவை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை.

பொதுவான ஒரு விளைவு கருதி (நிராயுதபாணிகளாக்குதல். பேச்சுவார்த்தைக்கு வரத் தூண்டுதல், தீர்வொன்றை ஏற்கச் சம்மதிக்கவைத்தல் சரணடையத் தூண்டுதல் போன்றவற்றில் எதற்காக வேனும்) தாக்குதல்நடத்தி அதல்கணிசமான அளவு பொதுமக்களும் ஆயுதம் தாங்கியவர்களும்இறந்தால் அத்தாக்குதல் (சர்வதேச)யுத்த நியதிகளுக்கு முரணானதாகும் என்பதில் ஐயமில்லை இதில்சம்பந்தப்பட்ட தரப்பினர்களோடு பின்னர் பேச்சுவார்த்தை நடத்தும் எண்ணமிருத்தல், பங்குபற்ற அனுமதித்தல் போன்றவற்றினைக் கருத்திற் கொள்ளுமிடத்து மாற்று வழிகள் பற்றிச் சிந்திக்க வேண்டுமே தவிர இராணுவ முனைப்பினால் களங்கமுறக் கூடாது. அழிவின் பின் செய்ய நினைப்பதை அழிவை ஏற்படுத்தாமலே செய்ய முனைய வேண்டும் என்பதற்கு ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் மட்டுமல்ல இன்னும்பல யுத்த களங்களும் உதாரணமாகி நிற்கின்றன எனலாம்.

நன்றி — வீரகேசரி

---

# பேச்சுவார்த்தை தொடங்கு முன்பு கட்டடவேலையை நிறுத்த வேண்டும்

## - பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

அயோத்தியாவில் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்ட பின்பே பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரோடும் பேச்சுவார்த்தை தொடங்கப்பட முடியும்என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

ஆலய அமைப்புக் கமிட்டியின் தூதுக் குழுவொன்று நேற்று முன்தினம் டில்லியில் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் அவர்களிடம் பிரதமர் ராவ் இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்த இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது கட்டுமாணப் பணி பற்றிய நீதிமன்ற உத்தரவுகளை உத்தரப் பிரதேச அரசு நிறைவேற்றாது விட்டால், ஏற்படக் கூடிய அபாயகரமான விளைவுகள் பற்றி இந்த மதத்தலைவர்களிடம் பிரதமர் விளக்கியுள்ளார்

இந்தப் பேச்சுவார்த்தை பற்றி விஷ்வ ஹிந்து பரிஷத் தலைவர் ஆசார்ய கிரிசாத் கிஷோர் கருத்து வெளியிடுகையில் பேச்சுக்கள் தேக்க நிலையைப் போக்குவதில் ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கை என்றும், எனினும் கார்சேவை தொடரும் என்றும், பிரதமருடன் பேச்சுக்கள் தொடரும் என்றும் தெரிவித்தார். அத்துடன் அயோத்தியா பிரச்சினையைத் தீர்ப்பதில் பிரதமர் ராவ் உண்மையான அக்கறையோடும், ஆர்வத்தோடும் இருப்பதை மதத் தலைவர்கள் உணர்ந்ததாகவும் குறிப்பிட்டார்.

# அயோத்திய விவகாரத்தில் நீதிமன்ற தலையீடு

(டில்லி)

அயோத்தியா ஆலயக் கமிட்டிப் பிரதிநிதிகளுக்கும், பிரதமருக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து விவகாரத்தில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு முழுமையாக அமுல்படுத்தப்படும் என்று நம்புவதாக பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் அயோத்தியாவில் மதத்தலைவர்கள் தமக்கிடையே நடத்தும் பேச்சுவார்த்தை முடிவுகளை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

# இன்று பதவியேற்பு

(டில்லி)

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியாக டாக்டர் சங்கர்தயாள்சர்மா இன்று சனிக்கிழமை பதவியேற்கவுள்ளார்.

இப்பதவியேற்பு வைபவம் புதுடில்லியில் உள்ள பாராளுமன்ற மைய மண்டபத்தில் காலை 11. 15 மணக்கு நடைபெறவுள்ளது.

இந்தியாவின் தலைமை நீதிபதி எம். என். ஹனிபா சர்மாவுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

ஈராக்கில் ஆவணம் தேடும்

# ஐ. நா. பரிசோதனைக்குழு முயற்சிகளை கைவிட்டது

(பக்தாத்)

ஈராக்கிய ஆயுத உற்பத்தித் திட்டங்கள் பற்றிய ஆவணங்களைத் தேடும் பொருட்டு, அமைச்சர் கட்டடத்திற்குள் பிரவேசிக்க முனைந்த ஐக்கிய நாடுகள் பரிசோதனைக் குழு அண்மையில் அந்த முயற்சிகளைக் கைவிட்டது.

ஈராக்கிய அதிகாரிகளோடு மூன்று வாரங்களாகத் தொடர்ந்த இழுபறிக்குப் பின்னர் வன்செயல்கள் தலை தூக்கலாம் என்ற அச்சம் காரணமாக ஐக்கிய நாடுகள் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இந்த முடிவை எடுத்ததாகச் சொல்லப்படுகிறது,

# அமெரிக்க நிறுவனத்தின் பகுதி நேர ஆலோசகர் தட்சர்

(லண்டன்)

அமெரிக்காவின் ராட்சத பிலிப் மொரிஸ் புகையிலை நிறுவனத்திற்கு பகுதி நேர ஆலோசகராகக் கடமையாற்ற முன்னாள் பிரித்தானிய பிரதமர் மார்கரெட் தட்சர் இணக்கம்தெரிவித்திருப்பதாக சண்டே டைம்ஸ் கூறியுள்ளது.

இதற்காக அவருக்கு ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் டொலர் ஊதியம் (மாதம் 27 லட்சம் ரூபா) கிடைக்கும்

சமீபத்தில் பிரபுக்கள் சபையில் அங்கத்தினராகிய தட்சர் சீமாட்டி சிகரெட் விளம்பரம், புகையிலை வரிகள், கிழக்கு ஐரோப்பாவிலும் மூன்றாம் உலக நாடுகளிலும் சந்தைகளைப் புகுத்துதல் போன்ற பிரச்சினைக்குரிய அம்சங்களில் ஆலோசனை கூறுவார்

அமெரிக்க பிலிப் மொரிஸ் நிறுவனம் பல நாடுகளில் இயங்கிவருகிறது உலகின்மிகப் பெரிய புகையிலை நிறுவனம் இதுவாகும். மார்பரோ, ஸன்ஸன், அன்ஹெட் உட்பட பலரக சிகரெட்டுகளை மொரிஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

ஈழநாதம்

# இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை

## -கலாநிதி பீற்றர்சாக்

[தென்மராட்சி]

''இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கும் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் சிறிலங்கா அரசு அக்கறைகொண்டதாகத் தெரியவில்லை. இதன் காரணமாகவே சுவீடன் போன்ற சமாதானத்தை விரும்பும்நாடுகளின் முயற்சிகளை இலங்கை அரசுதட்டிக்கழித்துவருகிறது. இதற்கு ஒரே வழி சமாதானத்தை விரும்பும் நாடுகள் அனைத்தும் இணைந்து கூட்டமைப்பாக இப்பிரச்சினையை அணுக வேண்டும். இதற்கான முன் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.''

இவ்வாறு சுவீடன் நாட்டின் உப்சால் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி பீற்றர்சாக் தெரிவித்தார். சாவகச்சேரி லயன்ஸ் கழக புதிய நிர்வாக சபையின் பதவியேற்பு வைபவத்தில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுவீடன் நாட்டிலுள்ள லயன்ஸ் கழகங்கள் மற்றும் ஏனைய பொது சர்வதேச அமைப்புக்கள் சுவீடன் அரசை நிர்ப்பந்தித்து வந்தன. அதன் அடிப்படையில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு சாரார்களிடையேயும் சர்வதேச மத்தியஸ்தம் செய்து அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்புதற்கான நடவடிக்கைகளை எடுக்க சுவீடன் அரசு முன் வந்தது.

உடனடியாகஇம்மத்தியஸ்த முயற்சியை விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் சுவீடன்அரசின் வெளிவிவகார அமைச்சு உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

சுவீடனின் இம் மத்தியஸ்தத்தை ஏற்படுத்துவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். ஆனால் இலங்கை அரசு இதற்கு எவ்வித பதிலையும் அளிக்காது நிர்ச்சிந்தையாக இருந்து சுவீடன் அரசின் முயற்சியைப் பொறுப்பற்ற முறையில் தட்டிக்கழித்து விட்டது. இதனால் சுவீடன் அரசின் முயற்சி பலனளிக்காமல் தோல்வியில் முடிந்தது என்றார்.

இதற்கு ஒரேவழி சமாதானத்தை விரும்பும் உலக நாடுகள் உதிரிகளாக நில்லாது கூட்டாகச் சேர்ந்து இப்பிரச்சினையை அணுக வேண்டும். இதற்கான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டு வருகிறது எனவும் கூறினார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கையிலுள்ள சர்வதேச அமைப்புகளும் முயற்சி செய்ய வேண்டும்சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஐ. நா. விற்கு இனப்பிரச்சினை சம்பந்தமாக அறிவித்ததையும் அவர் இங்கு குறிப்பிட்டார். இது போல் தொடர்ந்து சர்வதேச கழகங்கள் முயல வேண்டும் என்றார்

(35)

# கண்காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கமும் யாழ் பல்கலைக் கழகமும் இணைந்து நடாத்தும் மாணவர்க்கான விஞ்ஞான கண்காட்சிக்கு 25ஆம் திகதி சனிக்கிழமை வரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். 27ஆம், 28ஆம்திகதிகளில் க. பொ. த (உயர்தரம்) மாணவர், ஆசிரியர் ஆகியோர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் இவர்கள் புதிய நுழைவாயிலில் நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கண்காட்சி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

இக்கண்காட்சிக்காக விஞ்ஞான பீடம் இரண்டாம் அரையாண்டுத் தவணை ஆகஸ்ட் 3ஆம் திகதிஆரம்பிக்கப் படுமென பல்கலைக்கழக நிர்வாகத்தின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# இந். பாதுகாப்பு அமைச்சர் சீனா விஜயம்

இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் சீனாவிற்கு ஐந்துநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று புறப்பட்டு சென்றுள்ளார். இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் சீனாவிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

1991-ல் சீனப் பிரதமர் இந்தியாவிற்கு வந்திருந்தபோது இந்திய சீன எல்லைப்பிரதேசத்தில் நிலவும் டதற்ற நிலையைத் தணிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்வது பற்றி இவ் விஜயத்தில் ஆராயப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய உறுதிப்பாடு மற்றும் இரு தரப்பு புரிந்துணர்வு பற்றியும் இச் சந்திப்பின் போது பேசப்படும்.

எல்லைப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள படைகளை வாபஸ் பெற்று எல்லைப்புறபதற்ற நிலையை குறைப்பது பற்றி அண்மையில் இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் சீனாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போதும் ஆராயப்பட்டது.

1962இல் இரண்டு நாடுகளுக்கும் இடையே உறவுகள் சீர்குலைந்த பின்-பவாரின் இந்த விஜயம் முக்கிய திருப்பமாக வுள்ளதாக கருதப்படுகிறது.

1990இல் இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் குழு ஒன்று சீனாவிற்கு விஜயம் செய்த பின் சீன தேசியபல்கலைக்கழக குழுவொன்று இந்தியாவிற்கு விஜயம் செய்தது இந்த நடவடிக்கை மூலம் பாதுகாப்புத்துறையில் இரு நாடுகட்கும் இடையேயான தொடர்புகள் ஆரம்பமாகியமைகுறிப்பிடத்தக்கது.

# பெங்களூரில் புலிகளாம்

[சென்னை]

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குழு ஒன்று பெங்களூர்நகருக்கு வந்திருப்பதாகத் தமிழகப்பொலிஸார் வழங்கிய தகவலையடுத்து பெங்களூர் நகரப் பொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

பெங்களூர் பகுதியில் இப்போதுபொலிஸ் பந்தோபஸ்து அதிகரிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிரிட்டிஷ் தூதுவர் வெளியேற்றம்

ஈரானிற்கான பிரிட்டிஷ் தூதரக மூன்றாவது செயலாளரை ஒரு மாத காலத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி ஈரான் உத்தரவிட்டுள்ளது.

இவர் வெளியேற்றப்படுவதற்கான காரணம் ராஜதந்திர முறைகளுக்கு முரணாக நடந்து கொண்டமையே என ஈரான் அறிவித்துள்ளது.

அதேவேளை இவர் கடந்த யூன் 17ம் திகதி ஈரான் பாதுகாப்புப் படையினரால் பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

# அணு ஆயுதப் பிரச்சினை குறித்து அமெரிக்கா-இந்தியா பேச்சுவார்த்தை

அணு ஆயுதப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே இருதரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பேச்சுவார்த்தையின் போது அணு ஆயுதப் போட்டியைக் குறைப்பது தொடர்பாகஆராயப்பட்டதாகதெரிய வருகிறது. மேலும் அமெரிக்காவும் ரஷ்யாவும் மேற்கொண்ட அணு ஆயுதக் குறைபுத் தொடர்பாகவும், மேற்கு ஆசியா மற்றும் கொரியன் குடாப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அமெரிக்கக் குழுவினரால் எடுத்துக் கூறப்பட்டன.

இம்மாநாட்டில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை என்றும் வாஷிங்டனில்-மேலும் பேச்சு வார்த்தைகள் நடைபெறும் என்றும் அறியவருகிறது.

காஷ்மீர் மாநில பிரச்சினைக்கு சிம்லா ஒப்பந்தமே தீர்வாகும் என அமெரிக்க சிரேஷ்ட்ட அரச அதிகாரி ஒருவர் இப் பேச்சுக்களின் போது கருத்து வெளியிட்டார்.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிப்பதை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என அமெரிக்கா கருதுவதாக அந்த அமெரிக்க அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும் இந்த விவகாரம் பற்றி பாகிஸ்தானுக்கு அமெரிக்க நிலைப்பாடு அறிவிக்கப் படும் என மறைமுகமாகக் குறிப்பிட்ட அதிகாரி இந்த விடயங்களையிட்டு அமெரிக்கா கடுமையாக நடந்து கொள்ளும் என மேலும் தெரிவித்தார்.

# தம்புள்ள புனிதநகரில் சிலுவையுடன் சத்தியாக்கிரகம்

## - மிகிந்தலை விஹாராதிபதி அதிர்ச்சி

(கொழும்பு)

தம்புள்ளை புனித நகரில் பெரிய சிலுவை ஒன்றை வைத்துக் கொண்டு கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளும் கத்தோலிக்க சகோதரர்களும் சத்தியாக்கிரகம் செய்யும் படம் ஒன்று பத்திரிகையில் வெளிவந்ததையிட்டு நான் பேரதிர்ச்சி அடைந்தேன் என்று மிகிந்தலை ராஜமகா விஹாராதிபதி வண நம்பலாவ ரத்னசார தேரர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தம்புள்ளை புனித பிரதேசம் பௌத்த மக்கள் அனைவரினதும் ஒரு அரிய பொக்கிஷமாகும். பௌத்தர்களின் புனித பிரதேசங்களில் காலனித்துவ ஆட்சியாளர்கள் கூட பிறமத வழிபாட்டுத் தலங்களை அமைக்க முற்பட்டதில்லை.

தம்புள்ளையில் சிலுவை ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டதை ''மிகுந்துஜயந்தியைக்'' குறிக்குமுகமாக 2300 பேரைப் என தெரிவித்தார்.

தம்புள்ளை பகுதிக்கு அண்மையிலுள்ள கந்தளம என்னும் இடத்தில் உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டல் கட்டும் திட்டமொன்றை சிறிலங்கா அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இத் திட்டத்திற்கு எதிராக சிறிலங்கா எதிர்க் கட்சிகள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. இத்திட்டம் அந் நகரின் புனிதத்தைபாதிக்கும் என தெரிவிக்கின்றன. இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் ஒருஅம்சமாக சத்தியாக்கிரக போராட்டம் கந்தளமவில் நடத்தப்பட்டது இப்போராட்டத்தில் பெருமளவுபௌத்தபிக்குகளும்இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் போராட்டத்தில்

# முஸ்லிம்களின் எதிர்காலம் கொழும்பில் கருத்தரங்கு

(கொழும்பு)

வடக்கு மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கு ஒன்று கொழும்பில்நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை ரோகினி வீதியிலுள்ள இஸ்லாமிய கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் இடம்பெயர்ந்தோர் திரும்பிச் செல்லுதல், வேறிடங்களில் குடியேறுதல், வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினையில் அரசியல் கட்சிகளின் நிலை, தற்போதைய நிலை என்னும் நான்கு வெவ்வேறு தலைப்புகளில் இடம்பெறும் என இக் கருத்தரங்கின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

யாழ். பல நோ. கூ. சங்கம்–வரைவுள்ளது

## நீர் இறைக்கும் இயந்திரம்

# வடக்கே எடுத்துவர ஜனாதிபதி அனுமதிதேவை

(கொழும்பு)

வடபகுதிக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை எடுத்து வருவதற்கு ஜனாதிபதி பிரேமதாசாவின் அனுமதி பெறப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அனுமதியைப்பெற்று நீர் இறைக்கும் இயந்திரங்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவருவதற்கு முயற்சி எடுத்துவருவதாகக் கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன (க)

புலிகள்

# புலிகளை எதிர்த்துப் போராட முஸ்லிம் படை வேண்டும்

## –அஷ்ரப் கோருகிறார்

(கொழும்பு)

புலிகளை எதிர்த்துப் போராட முஸ்லிம் படை ஒன்றை அரசாங்கம் அமைக்க வேண்டும். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிராகத் தாம் ஆயுதப்போர் ஒன்றை நடத்த வேண்டி வரும் என்றும் தெரிவித்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட புலிப்போராளிகள் அனைவரையும் கொல்ல தாம் தயங்கமாட்டோம் என்றும் இப் பணிக்காக அரசு தம்மை உற்சாகப் படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# இராணுவ கண்ணிவெடிக்கு ஐந்து படையினர் காயம்

சினைக்குத் தீர்வு காணக்கூடிய ...
கான நடவடிக்கைகளை எடுக்கு மாறு சுவீடன் நாட்டிலுள்ள லயன்ஸ் கழகங்கள் மற்றும் ஏனைய பொது சர்வதேச அமைப்புக்கள் சுவீடன் அரசை நிர்ப்பந்தித்து வந்தன. அதன்

## - மிகிந்தலை விஹாராதிபதி அதிர்ச்சி

(கொழும்பு)

தம்புள்ளை புனித நகரில் பெரிய சிலுவை ஒன்றை வைத்துக் கொண்டு கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளும் கத்தோலிக்க சகோதரர்களும் சத்தியாக்கிரகம் செய்யும் படம் ஒன்று பத்திரிகையில் வெளி வந்ததையிட்டு நான் பேரதிர்ச்சி அடைந்தேன் என்று மிகிந்தலை ராஜமகா விஹாராதிபதி வண நம்பலாவ ரத்ன சார தேரர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தம்புள்ளை புனித பிரதேசம் பௌத்த மக்கள் அனைவரினதும் ஒரு அரிய பொக்கிஷமாகும். பௌத்தர்களின் புனித பிரதேசங்களில் காலனித்துவ ஆட்சியாளர்கள் கூட பிறமத வழிபாட்டுத் தலங்களை அமைக்க முற்பட்டதில்லை.

தம்புள்ளையில் சிலுவை ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டதை ''மிகுந்துஜயந்தியைக்'' குறிக்குமுகமாக 2300 பேரைப் பௌத்த குருமார்களாக்குவதை எதிர்க்கும் பிக்குமார்களும், பௌத்தர்களும் கண்மூடித்தனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது புதினமாகும் என தெரிவித்தார்.

தம்புள்ளை பகுதிக்கு அண்மையிலுள்ள கந்தளம என்னும் இடத்தில் உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டல் கட்டும் திட்டமொன்றை சிறிலங்கா அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இத் திட்டத்திற்கு எதிராக சிறிலங்கா எதிர்க் கட்சிகள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. இத்திட்டம் அந் நகரின் புனிதத்தைபாதிக்கும் என தெரிவிக்கின்றன. இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் ஒரு அம்சமாக சத்தியாக்கிரக போராட்டம் கந்தளமவில் நடத்தப்பட்டது. இப்போராட்டத்தில் பெருமளவு பௌத்தபிக்குகளும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் போராட்டத்தில் கலந்து கொண்ட கிறிஸ்தவ பிரதிநிதிகள் பெரிய சிலுவை ஒன்றை வைத்திருந்தனர். இக் காட்சியை கொண்ட புகைப் படமொன்றை ''டெயிலி நியூஸ்'' பத்திரிகை முன் பக்கத்தில் பிரசுரித்துள்ளது.

இப்படம் குறித்தே மேற்படி கருத்துகளை மிகிந்தலை ராஜ மகா விஹாராபதி தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்களின் எதிர்காலம் கொழும்பில் கருத்தரங்கு

(கொழும்பு)

வடக்கு மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கு ஒன்று கொழும்பில்நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை ரோகினி வீதியிலுள்ள இஸ்லாமிய கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் இடம் பெயர்ந்தோர் திரும்பிச் செல்லுதல், வேறிடங்களில் குடியேறுதல், வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினையில் அரசியல் கட்சிகளின் நிலை, தற்போதைய நிலை என்னும் நான்கு வெவ்வேறு தலைப்புகளில் இடம்பெறும் என இக் கருத்தரங்கின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.


யாழ். பல நோ. கூ. சங்கம்-வரைவுள்ளது

## முக்கிய அறிவித்தல்

## விசேட பொதுக்கூட்டம் பிற்போடல்

26-7-92ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த விசேட பொதுக்கூட்டம் பிற்போடப் பட்டுள்ளது. இதற்குரிய அறிவித்தல்கள் சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்படும்.

சூ. சிறில் — தலைவர்
பு. நவரத்தினம் — செயலாளர்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்-வ. து,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
24-7-92. (சி/4766)



## மரண அறிவித்தல்

## வே. க. செல்லத்துரை

வே க. செல்லத்துரை 20-07-92-ல் கிளிநொச்சியில் காலமானார். இவர் புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக்கொண்டவரும், கொழும்பு வடக்கு உனுப்பிட்டி வத்தளையை வசிப்பிடமாகக்கொண்டவரும், உனுப்பிட்டி முத்துக்குமரன் ஆலய தர்மகர்த்தாவும், 1-ம் நம்பர் 4-ம் குறுக்குத்தெரு சுவிப்பலஸ் உரிமையாளரும், ஒல்கொட்மாவத்தை 243, யுபிலி ரெக்ஸ் பங்காளரும், காலஞ்சென்ற கந்தையா வள்ளிக்குட்டியின் அருமைமகனும், காலஞ்சென்ற நாகநாதி சிவகாமிப் பிள்ளையின் அன்பு மருமகனும், (அம்மா என்றழைக்கப் படும் லெட்சுமிப்பிள்ளையின் அன்புக்கணவனும் ஆவார்.

இவரின் ஈமைக்கிரியைகள் 21-07-92-ல் கிளிநொச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
லெட்சுமிப்பிள்ளை
(அம்மா.)

(சி-4765)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.


### யாழ்.

வும் செய்திகள் வந்துகொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ். குடாநாட்டில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுவிட்டதாக இராணுவப் பேச்சாளர் செய்தியாளரிடம் கூறினார். இது போல நிறுத்தி மீண்டும் போரைத் தொடங்கும் இராணுவத்தின் யுக்தி என்றும் இதுதான் பிரிட்டிஷ் நிறுவனங்களுக்குக் கவலைதரும் விஷயமாக இருக்கிறது என்றார் மைக்கல் றோஜர்ஸ்.

இப்போது நாங்கள் பார்ப்பது ஓர் போர் யுக்தி என்றே நான் நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பரில் பருவ மழை பெய்யத் தொடங்குவதற்கு முன்னர் யாழ்ப்பாண மக்களின் வாசலுக்குச் சென்று பின்னர் போரை நிறுத்தி யாழ்ப்பாண மக்களை யாழ்ப்பாண தீபகற்பத்திலிருந்துவெளியேறவைக்கமுடியுமா என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர் என்றார் மைக்கல் றோஜேர்ஸ்.

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு சென்று திரும்பிய டாக்டர் மைக்கல் ரெயிலர் அவர்கள், யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடைகாரணமாக உணவுப்பொருள்கள், மருந்துப் பொருள்கள், எரிபொருள்கள் மின்சக்தியின்றி மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருவதாகக் கூறினார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள கடிதத்தில், விடுதலைப் புலிகள் மக்களை சில சமயம் கவசமாகப்பாவிப்பதாகத் தாம் நினைப்பதாகவும், அது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகமைக்கல்றோஜேர்ஸ் தெரிவித்துள்ளார்.

### மூதூர்

சோலை) என்னும் இளைஞரைச் சுட்டுக் கொன்றனர். இதன்பின் திருமலை சங்குவேலியைச் சேர்ந்த சுந்தரம் கோணலிங்கம் (வயது 40) என்பவரை கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

### 8 இராணுவம்

சார் வழிமறித்து விசாரித்த போது அவ்வேளையில் அவர்கள் பிரயாணம் செய்ததற்கான காரணம் திருப்திகரமாக அமையாததாலும் அப்பகுதியில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட கொள்ளைகள் பல இடம்பெற்றுள்ளதாலும் இவர்கள் இருவரையும் கைது செய்ததாக பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இந்த எட்டுப்பேரும் மேலதிக விசாரணைக்காக இராணுவ பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### வெலிக்கடை

பற்றிய விசாரணை நடாத்த சுயாதீன சர்வதேச ஆணைக் குழு ஒன்று நிறுவப்படவேண்டும் எனவும் உலகத் தமிழர் ஒன்றியம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

கிறது.

காஷ்மீர் மாநில பிரச்சினைக்கு சிம்லா ஒப்பந்தமே தீர்வாகும் என அமெரிக்க சிரேஷ்ட்ட அரச அதிகாரி ஒருவர் இப் பேச்சுக்களின் போது கருத்து வெளியிட்டார்.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு

### நீர் இறைக்கும் இயந்திரம்

# வடக்கே எடுத்துவர ஜனாதிபதி அனுமதிதேவை

(கொழும்பு)

வடபகுதிக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை எடுத்துவருவதற்கு ஜனாதிபதி பிரேமதாசாவின் அனுமதி பெறப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அனுமதியைப்பெற்று நீர் இறைக்கும் இயந்திரங்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவருவதற்கு முயற்சி எடுத்துவருவதாகக் கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

### புலிகள்

ரக் குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன

நேற்றுக்காலை 8-30 மணியளவில் புதுக்காட்டுச் சந்திப் பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இப்பகுதி பொதுமக்களின் வாழ்விடங்கள் மீது பத்திற்கு மேற்பட்ட குண்டுகளை வீசின இதனால் இப்பகுதியில் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன. ஆயினும் இத்தாக்குதல்களினால் எவரும் காயமடையவில்லை. பொதுமக்களின் பல தென்னந்தோட்டங்களும்சேதமடைந்துள்ளன. (ச, க)

### மாவீரர்

மட்டு/அம்பாறை தொடர்பக பொறுப்பாளர் திரு. அருணகிரி மங்கள விளக்கேற்றிவைப்பார். கடற்புலிகள் தளபதி திரு. கங்கையமரன் மாவீரர்களுக்குத் தீபமேற்றுவார்.

அத்துடன் விடுதலைப்புலிகள் முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

### கதிரவெளி

பிப்பிள்ளை தங்கம்மா (வாகரை) மாக்கிரட் (ஆண்டாங்குளம்) ஆகியோரைக் கைது செய்து தமது முகாமுக்கு கொண்டுசென்றனர். இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட நால்வரும் குடும்பப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### துப்பாக்கி

நேரம் நீடித்த சூடு விட்டு விட்டும் தொடர்ச்சியாகவும் இடம்பெற்றது.

இதனை அடுத்து 3. 20 மணியளவில் விமானம் ஒன்றும் யாழ். நகரை வட்டமிட்டுச் சென்றது. (21)

# முஸ்லிம் படை வேண்டும்

## -அஷ்ரப் கோருகிறார்

(கொழும்பு)

புலிகளை எதிர்த்துப் போராட முஸ்லிம் படை ஒன்றை அரசாங்கம் அமைக்க வேண்டும். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரத் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிராகத் தாம் ஆயுதப்போர் ஒன்றை நடத்த வேண்டி வரும் என்றும் தெரிவித்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட புலிப்போராளிகள் அனைவரையும் கொல்ல தாம் தயங்கமாட்டோம் என்றும் இப் பணிக்காக அரசு தம்மை உற்சாகப் படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# இராணுவ கண்ணிவெடிக்கு ஐந்து படையினர் காயம்

(வவுனியா)

வவுனியாவிற்கு கிழக்கேயுள்ள பிரப்பமடு சிறிலங்கா இராணுவ முகாம் அருகே கண்ணிவெடி வெடித்ததில் ஐந்து படையினர் காயமடைந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று பிற்பகல் 3.30 மணியளவில் இம் முகாமின் முன்னணிக் காவலரண் ஒன்றின் அருகே இச் சம்பவம் இடம்பெற்றது. நாய் ஒன்று அவ்விடத்தால் ஓடியதால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இத் தரைக்கண்ணிவெடி வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவர் லெப்டினன் தரத்தைச் சேர்ந்தவர் எனவும் ஒருவர் பொலிஸ்காரர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சங்கிலி அறுத்தவரை புலிகள் மடக்கிப் பிடித்தனர்

நுணாவில் பகுதியில் பெண்மணி ஒருவரின் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிய திருடன் ஒருவனை விடுதலைப் புலிகள் மடக்கிப் பிடித்தனர். பெண்மணியின்கூக்குரல்கேட்டு அவ்விடத்துக்கு விரைந்த விடுதலைப்புலிகள்மோட்டார் சைக்கிளில் திருடனைத் துரத்திப் பிடித்தனர்.

அவரிடமிருந்து திருடப்பட்ட சங்கிலியை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்த விடுதலைப்புலிகள் திருடனை தமிழீழக் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**24-07-1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 4984

வட பகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

41-5583, 26-3356, 26-1791, 26-139, 24-4747, 24-9825 26-786, 27-5260, 24-4481, 36-3331, 37-4619, 36-8158, 25-5435, 25-3757, 25-393, 25-9767, 36-1121, 36-6155, 24-5087, 25-8281, 28-3541, 70-9694, 72-58

வட பகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:

24-6759, 26-3632, 28-4672, 27-6583, 24-9938 26-6075, 24-2496, 41-4893, 27-8999, 40-7541, 26-1658, 26-3321, 22-4710